சுவாசக்காற்று, நலிந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரமான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், மாண்புமிகு உறுப்பினர்களாகிய உங்கள் ஒவ்வொருவரையும் நான் அன்போடு வரவேற்கிறேன். மக்கள் சேவையின் மகத்தான பணிக்கு முழுமையாக அர்ப்பணித்து, தமிழக மக்களின் அங்கீகாரம் பெற்றுள்ள உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்தி வரவேற்கிறேன்.

ஜனநாயக முறையில் அமைதியாக தேர்தல் நடைபெற ஒத்துழைத்த பொதுமக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களாகப் பதவியேற்க இருக்கும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய எண்ணத்தால், உழைப்பால் தமிழக மக்களின் வாழ்விற்கும், வளத்திற்கும் மேலும் பெருமை சேர்க்க வேண்டுமென்று என் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. இரங்கற்குறிப்பு

மாண்புமிகு அமைச்சர் திரு. என். மரியம் பிச்சை அவர்கள் மறைவு

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (முனைவர் செ.கு. தமிழரசன்): திருச்சி மாவட்டம், திருச்சி மேற்கு தொகுதியிலிருந்து பதினான்காவது தமிழக சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சுற்றுச்சூழல் துறை அமைச்சராக பதவியேற்ற மாண்புமிகு திரு. என். மரியம் பிச்சை அவர்கள் இன்று (23-5-2011) காலை எதிர்பாராதவிதமாக சாலை விபத்தில் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அன்னாரது மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

மறைவுற்ற மாண்புமிகு அமைச்சருக்கு மரியாதை செலுத்தும் வகையில், உறுப்பினராகப் பதவியேற்க உள்ள அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2011 மே 23]

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

1. உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்—*தொடர்ச்சி*

பிற்பகல் 12-40

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (முனைவர் செ.கு. தமிழரசன்): சிறப்புமிக்க இப்பேரவைக்கு ஒரு தலைவரை இப்பேரவை தேர்ந்தெடுக்கிறவரையில் ஆற்ற வேண்டிய முன் அலுவல்களை நிறைவேற்றுவதற்கென என்னை இப்பேரவையின் தற்காலிகத் தலைவராக மேதகு ஆளுநர் அவர்கள் நியமித்திருக்கிறார்கள். அதற்காக மேதகு ஆளுநர் அவர்களுக்கும், ஒரு எளிய அமைப்பைச் சேர்ந்த, ஒரு எளிய குடும்பத்தைச் சேர்ந்த, ஒரு எளியவனாகிய என்னை வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த இருக்கையிலே அமருவதற்கு ஒரு பெரும் வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலில் பேரவைக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாம் இப்பேரவையின் அலுவல்களை ஏற்று நடத்துவதற்குமுன், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அதற்குரிய உறுதிமொழியை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியை இன்று நிறைவேற்றுவதற்காகவும், பேரவைத் தலைவர் தேர்தலை நடத்துவதற்காகவும் மேதகு ஆளுநர் அவர்கள் என்னைப் பணித்துள்ளார்கள்.

முதலில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அதற்குப் பிறகு மற்ற அமைச்சர் பெருமக்களும், பிறகு செயலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதனுடைய அடிப்படையில் சட்டமன்றக் கட்சித் தலைவர்களையும், அடுத்து முன்னாள் முதலமைச்சரையும், முன்னாள் துணை முதலமைச்சரையும், முன்னாள் அமைச்சர்களையும், அரசு தலைமைக் கொறடாவையும், பிறகு தமிழ் அகர வரிசைப்படி உறுப்பினர் பெருமக்களையும் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ள சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்கள் அழைப்பார்கள். அவ்வாறு அழைக்கப்பெற்றவுடன்